**நகராட்சி அலுவலகம்,**
**சாத்தூர்.**
**நாள்: 28.11.2023**

---

# <u>சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக் கூட்டம் அறிவிப்பு</u>

**<u>கூட்டம் எண். 21</u>**

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் கார்த்திகை 14 ஆம் நாள் 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 30.11.2023ம் தேதியன்று வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**
**சாத்தூர் நகராட்சி.**

**<u>பொருள் எண்</u>**.1

சாத்தூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள வருவாய் பிரிவிற்கு புதியதாக HP Laserjet A3 Printer சப்ளை செய்யும் பணிக்கு 08.11.2023-ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. Star Systems Services - ரூ.62,000/-
2. Rathan Computer - ரூ.64,500/-
3. Genius - ரூ.67,500/-

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மேற்கண்ட பணியினை ரூ.65,000/-க்கு மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.342, நாள்:27.09.2023-ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆ) வசூல் பணியினை முன்னிட்டு பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Star Systems Services அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வாங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 657/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.367, நாள்: 30.11.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்**.2

சாத்தூர் நகராட்சியினால் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்தவைக்கு விளம்பர கட்டணம் ரூ.2,814/- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 573/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.368, நாள்: 30.11.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்**.3

சாத்தூர் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை தினத்தந்தி தொழில்மலரில் ஒரு நாள் மட்டும் ½ பக்க அளவில் விளம்பரம் செய்தவைக்கு விளம்பர கட்டணம் ரூ.22,937/- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.322/2018/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.369, நாள்: 30.11.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்**.4

சாத்தூர் நகர் பகுதியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்ல்ஸ் திருநெல்வேலி அவர்கள் வழியாக ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கு நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அவர்களால் திட்ட மதிப்பீட்டிற்கு 05.08.2020-ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் மதிப்பீட்டு விகிதத்திற்கு 12 சதவீதமே GST விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது 01.01.2022 முதல் மத்திய மாநில அரசுகளால் GST வரியானது 12 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்வு செய்யப்பட்டுள்ளது. அதன்படி உயர்வு செய்யப்பட்ட 18 சதவீதத்தினை ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்ல்ஸ் திருநெல்வேலி அவர்களுக்கு பட்டியல் தொகை வழங்கும் போது திருத்திய GST-ன்படி வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.957/2019/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.370, நாள்: 30.11.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்</u>**.5

சாத்தூர் நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய 5-வது மற்றும் 6-வது ஊதியக்குழு நிலுவைத் தொகைக்கு வட்டியுடன் வழங்கக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.16910/2020-ல் தொடரப்பட்டது. மேற்கண்ட வழக்கில் நகராட்சியின் சார்பாக கே.பி.கிருஷ்ணதாஸ் என்பவரால் வழக்கினை ஏற்று நடத்தப்பட்டது. மேலும் மேற்கண்ட வழக்கில் நீதிமன்றத்தால் வட்டி தொகையினை உடன் கணக்கீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதன் பொருட்டு தனியார் துறையின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது. அதன் பொருட்டு வழக்கறிஞர் கட்டணம் ரூ.5,000/-ம் தனியார் துறைக்கு வட்டி கணக்கீடு செய்ததற்கு ரூ.13,500/-ம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3615/2001/அ3)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.371, நாள்: 30.11.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்</u>**.6

சாத்தூர் நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு பிடித்தம் செய்யப்பட்ட EPF தொகையை தொழிலாளர் வைப்புநிதி நிறுவனத்திற்கு செலுத்துவது சம்மந்தமாக தொடரப்பட்டுள்ள.S.R.No.87752/2023 வழக்கில் நகராட்சி சார்பாக திரு.எம்.பாண்டியராஜன், பி.ஏ.,பி.எல்., வழக்கறிஞர் ஆஜராகவும், அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.320/2013/பி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.372, நாள்: 30.11.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்</u>**.7

சாத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட மேலக்காந்தி நகரில் குடிநீர் சரிவர கிடைக்கவில்லை. மேலக்காந்தி நகருக்கு செல்லும் குடிநீர் பகிர்மான மெயின் குழாயினை பழுது பார்த்து புதியதாக பைப் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 805/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.373, நாள்: 30.11.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்**.8

சாத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட வெள்ளக்கரை ரோட்டில் உள்ள (Slaughter House பின்புறம்) பொது கழிப்பிடம் இருக்கும் இடம் மற்றும் அதற்கு அருகில் இருக்கும் நகராட்சிக்கு சொந்தமான இடத்தினையும் சேர்த்து நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் (Urban Primary Health Center) அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் 17.07.2023 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் சென்னை அவர்களால் 17.07.2023 அன்று ரூ.120.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பணியினை மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக மிகவும் சேதமடைந்துள்ள பொது கழிப்பிடத்தினை அகற்றுவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.95,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 806/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.374, நாள்: 30.11.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்**.9

சாத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட மேலக்காந்தி நகர் ஆரம்ப பள்ளியில் புதிய கட்டிடம் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் பொருட்டு மிகவும் பழுதடைந்துள்ள பள்ளிக் கட்டிடத்திற்கு உறுதித்தன்மை சான்று (Stablity Certificate) அரசு பொறியியல் கல்லூரியில் இருந்து பெறப்பட்டுள்ளது. எனவே அக்கட்டிடத்தினை அகற்றுவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.2,80,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 807/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.375, நாள்: 30.11.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்**.10

சாத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட பெருமாள் கோவில் தெற்கு ரத வீதியில் உள்ள பழைய கவுன்சில் அறை மிகவும் பழுதடைந்துள்ள கட்டிடத்திற்கு உறுதித்தன்மை சான்று (Stablity Certificate) அரசு பொறியியல் கல்லூரியில் இருந்து பெறப்பட்டுள்ளது. எனவே அக்கட்டிடத்தினை அகற்றுவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,20,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 808/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.376, நாள்: 30.11.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்**.11

சாத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட காமராஜபுரத்தில் உள்ள பழைய வணிக வளாக கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ள கட்டிடத்திற்கு உறுதித்தன்மை சான்று (Stablity Certificate) அரசு பொறியில் கல்லூரியில் இருந்து பெறப்பட்டுள்ளது. எனவே அக்கட்டிடத்தினை அகற்றுவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 810/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.377, நாள்: 30.11.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்**.12

சாத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட பெருமாள் கோவில் தெற்கு மாட வீதியில் உள்ள ஆணையாளர் பழைய குடியிருப்பு மிகவும் பழுதடைந்துள்ள கட்டிடத்திற்கு உறுதித்தன்மை சான்று (Stablity Certificate) அரசு பொறியியல் கல்லூரியில் இருந்து பெறப்பட்டுள்ளது. எனவே அக்கட்டிடத்தினை அகற்றுவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 812/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.378, நாள்: 30.11.2023**
**தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**